**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C.193/2023**

**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ரவி சங்கர்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. முலஜி** | **Calling** | : | |
| **Village** | : | **வத்தலக்குண்டு ரோடு** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **52** |
| | | | **Dated** | : | **25.02.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**A1 and A2 present. On behalf of accused counsel not present. The accused represented the counsel due to illness of their counsel's mother, he is not present. Recording the same. In the presents of accused the witness examined. Prosecution side counsel present.**

பட்டியல் சாட்சி 4 திரு. ரவி சங்கர் ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அ.சா. 3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து மரமில்லில் வேலை செய்து வருகிறேன். அசா. 1 என் முதலாளி. அவரது மரக்கடையில் நான் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 30.11.2021ம் தேதி மதியம் சுமார் 02.00 மணி இருக்கும், அன்றைய தினம் எதிரிகள் அசா. 1ன் மரமில்லில் வேலை செய்து கொண்டு இருந்தபோது முன்பணம் வாங்கி இருந்தார்கள். இது சம்மந்தமாக 04.12.2021ம் தேதி மதியம் 03.15 மணிக்கு அசா. 1 தான் கொடுத்த முன்பணத்தை எதிரிகளிடம் கேட்ட போது எதிரிகள் இருவரும் அசா. ஐ கத்தியால் குத்தினார்கள். தனித் தனி

கத்தியா, ஒரே கத்தியா என்று தெரியாது. அசா. 1ன் கழுத்தின் இடது பக்கத்தில் இதனால் காயம் ஏற்பட்டது. அ சா. 2 மனோஜ் படேல் மற்றும் பட்டியல் சாட்சி 3 கோபால் ஆகியோர் காயம்பட்ட அசா. 1 ஐ திண்டுக்கல் JCB மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார்கள். மேற்கண்ட விபரத்தை அசா. 1 சொல்லி எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–** இல்லை.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2025.02.26 12:20:33 +0530